**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 77/2026**
**U/s.406,420 IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW.7)**

| | |
|---|---|
| **Name** : திருமதி. ரவிமதி | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

1,2 எதிரிகள் ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.77/2026 13.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.10**

**<u>முதல் விசாரணை:</u>**

**1,** நான் தஞ்சாவூர் மாவட்ட குற்ற பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.01.2026 ம் தேதி 13.00 மணியளவில்தஞ்சாவூர் மாவட்ட குற்றபிரிவு சிறப்பு உதவி ஆயவாளர் திருமதி. ஆதிலெட்சுமி நிலைய பொறுப்பிலிருந்தபோது D.No. 1576/2025 தேதி 26.09.2025 தஞ்சாவூர் மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 1 அவர்களிடமிருநது வரபெற்ற கடிதத்தை பெற்று , பார்வையிட்டு பின்பு மனுதாரரிடமிருந்து புகாரை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண். 03/2026 , சபி. 406, 420 இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்பு அசல் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை இணைத்து அதன் ஒரு நகலை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 , தஞ்சாவூர்ற்கு அனுப்பி வைத்தும் அதன் மற்றொரு நகலை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். **புகார் அசாஆ 2 . ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துகொண்டு நடந்த சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1 வது எதிரி காமராஜ் என்பவர் திருவையாறு அருகிலுள்ள அந்தனகுறிச்சி வடக்கு தெரு, வீட்டு எண் 4 முன்பு நின்று கொண்டிருந்தவரை போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவர்களை பிடித்து விசாரித்ததில் அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தவரை காரணம் கூறி கைது செய்து, பின்பு அவர் தாமாக குற்றத்தை ஒப்புகொண்டு அவர் எவ்வித அச்சுறுத்தலும், துன்பறுத்தலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை தனிநபர்கள் சாட்சிகள் எவரும்

முன்வராததால் தலைமை காவலர் திரு. சதிஷ்குமார், இரண்டாம் நிலை காவலர் திரு. கார்த்திகேயன் அவர்கள் முன்னிலையில் பதிவு செய்தும், பின்பு 1 வது எதிரி தம்மிடமிருந்து தாமாக எடுத்து ஆஜர் செய்த Redmi செல்போனை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும், பின்பு வழகது சொத்து மற்றும் எதிரியை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 2 வது எதிரி ராமசந்திரன் என்பவர் தஞ்சாவூர் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp No. 721/2026 , 05.02.2026 முன் ஜாமீனில் சென்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. **1 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 4 , கைப்பற்றுதல் மகசர் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்பு இவ்வழக்கில் எனது புலன் விசாரணை முடித்து கொண்ட நான் சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 02.02.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **2 வது எதிரி கணக்கு வைத்துள்ள பாங்க் ஆப் பரோடா வங்கி கணக்கின் பரிவர்த்தனை அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி 1 எதிரிக்கு பணம் அனுப்பிய ரூ. 1,90,000/- கான வங்கி ரசீது (4) அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

புகார் தாரரிடம் பொய்யான புகாரை பெற்று எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவர கணக்கிற்காக வீட்டிலிருந்த எதிரிகளை விசாரணைக்காக அழைத்து வந்து பொய்யாக வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் 1,2 எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல.எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.